நாள் - 25.06.2024 CC. 64/ 2016 அ.சா.6 சின்னதுரை , த-பெ.ஜெகநாதன்

**கு.ப.ம.எண். 2872 /2022 , நாள் -07.07.2022** மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் **அ.சா.6** இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

1) எனக்கு சித்திரகுடி சொந்த ஊராகும். இறந்து போன நபரின் சொந்த ஊர் இளங்காடு ஆகும். இறந்து போன நடராஜனை எனக்கு தெரியும். அவர் ஹாஸ்டலில் வேலை செய்து வந்தார். ஹாஸ்டலுக்கும், எனது வீட்டிற்கும் சுமார் 1 கி.மீ. தூரம் இருக்கும். பார்வை மகசரில் என்னை சாட்சியாக இருக்க சொல்லி போலிசார் கேட்டார்கள். எனது வயலுக்கு செல்வதற்கு மாரியம்மன் கோவில் மேற்கு பக்கமாக செல்ல வேண்டும் என்றால் சரிதான். போலிசார் விசாரிக்கும்போது என்னுடன் வேறு நபர்கள் யாரும் வந்ததாக சொல்லவில்லை. அப்போது மற்றொரு பார்வை மகசர் சாட்சி எதற்காக காவல்நிலையம் வந்தார் என்று எனக்கு தெரியாது. நானும், அவரும் விபத்து நடந்த இடத்தில் கையெழுத்து செய்தோம். விபத்தை நேரடியாக நான் பார்க்கவில்லை.

2) நான் பார்க்கும்போது காயமுற்றவர் அந்த இடத்தில் கிடந்தார். நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று நான் படித்து பார்க்கவில்லை. சம்பவம் நடந்த இடத்தில் காயமுற்றவர் இருந்ததாக குறிப்பிடபடவில்லை என்பதுபற்றி எனக்கு தெரியாது. நான் ஒரு கையெழுத்து மட்டும் செய்தேன். இறந்து போன நபர் எனக்கு நண்பர் ஆவார். காவல்நிலையத்தில் போலிசார் கேட்டுகொண்டதன்பேரில் நான் கையெழுத்து செய்தேன் என்றும், முதல்

விசாரணையில் எனது முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை.**